

மதுராந்தகம் தொகுதி இடைதேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து ஓணம்பாக்கம் பகுதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் திமுக செய்த சாதனைகளை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார் உடன் ஒன்றிய செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், கூலூர் ராஜேந்திரன், ஆர்த்தி ரவி, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சித்திக் அலி, திருவாலங்காடு இளைஞரணி அமைப்பாளர் ஆர்.யுவராஜ், மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தொ.மு.ச. நிர்வாகிகள் சார்பில் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம்

கடமலைபுத்தூர் கிராமத்தில் பேரவை தலைவர் கி.நடராசன் தலைமையில் வாக்கு சேகரிப்பு!

ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ - கோ.சி.வள்ளுவன் - என்.வேலு - தொ.மு.ச. பேரவை இணைப்பு சங்க நிர்வாகிகள் பங்கேற்பு!

மதுராந்தகம், அக். 04 - மதுராந்தகம் சட்ட மன்ற தொகுதி இடைத் தேர்தலில், திராவிட முன் னேற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் ஆசியுடன், மதசார் பற்ற முற்போக்கு கூட் டணி சார்பில் போட்டி யிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியம், கடம லைபுத்தூர் கிராமத்தில், தொ.மு.ச. பேரவை தலை வர் கி.நடராசன் தலைமை யில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்தி ற்கு வாக்கு சேகரித்தனர்.

இந்நிகழ்வில் உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர்.வசந்த வேல், கிளைக் கழகச் செய லாளர் என்.வேலு, இளை ஞர் அணியினர், மகளிர் அணியினர், தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன், துணைத் தலைவர் இரா. பொன்னுராம், அமைப் புச் செயலாளர் வே.வேலு சுவாமி, இணைப் பொதுச் செயலாளர், பா. மணிமா றன், ஜெ.விஜயகுமார், அலுவலகச் செயலாளர் ஆ.சீ.அருணகிரி, ப. பன்னீர்செல்வம், பேரவை செயலாளர்கள் எம்.சண் முகம், என்.தனசேகரன், ஆர்.சண்முகசுந்தரம், ப.பன்னீர்செல்வம், மா.அருணகிரிநாதன், சு.பத்மநாபன் மற்றும் செங்கல்பட்டு தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் நிர்வா கிகள், மின்சார வாரிய, ஆட்டோ, டாஸ்மாக், நுகர்பொருள் வாணிப கழ கம், நியாயவிலைக் கடை, அங்கன்வாடி தொ.மு.ச, தமிழ்நாடு வாழ்விட மேம் பாட்டு வாரிய மாநில பொதுச் செயலாளர் சண் முகசுந்தரம், காஞ்சிபுரம் போக்குவரத்து கழக மண் டல தொ.மு.ச. பொதுச் செயலாளர் ரவி, மா. போ.க. அலுவலக பணியா ளர் சங்கப் பொதுச் செய லாளர் வி.மகேந்திரன் மற் றும் மாநகர் போக்கு வரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த. சரவணகு மார், பொருளாளர் கி.சீனி வாசன், தலைமை நிலையச் செயலாளர் அ.தங்கராஜ், அமைப்பு செயலாளர், நா. செல்வகுமார், பிரச்சாரச் செயலாளர் மு.ஜோதி, துணைத் தலைவர்கள், இணைப் பொதுச் செய லாளர்கள், இணைச் செய லாளர்கள், பணிமனை செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் மற்றும் செயல்வீரர்கள் 500 க்கும் மேற்பட்டோர் பெருந்திர ளாக வாக்கு சேகரிப்பில் கலந்து கொண்டனர்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில்

கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து ஒரத்தூரில் பிரச்சாரம்!

கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் வீடு வீடாக வாக்கு சேகரித்தார்!

மாதவரம், அக்.4- மதுராந்தகம் சட்ட மன்ற தொகுதி இடைத் தேர்தலில் ஒரத்தூர் புது காலனியில் மாநில மீனவ ரணி துணை தலைவர் கே.பி.சங்கர் கழக நிர்வாகி களுடன் வீடு வீடாக பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.

நடைபெற உள்ள மது ராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்த லில்

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றி யூர் சட்டமன்ற தொகுதி கழகத்திற்கு ஒதுக்கப்பட் டுள்ள 151 பாகத்தில் உள்ள புது காலணி பகுதி யில் மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங் கர் வீடு வீடாக பொதுமக் களை சந்தித்து கழக தலை வர் அவர்களின் ஆசியோ டும், இளந்தலைவர் அவர் களின் வாழ்த்துகளோடும் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பரந்தாமன் அவர்களுக்கு ஆதரவாக வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அதிக அளவில் பெண் கள் கலந்து கொண்டு வெற்றி வேட்பாளர் அண் ணன் ஐ.பரந்தாமன் அவர் களுக்கு ஆதரவாக உதய சூரியன் சின்னத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஒரத்தூர் கிளை கழக செயலாளர்கள் வெங்க டேசன், காசிநாதன், பெரு மாள்,

திருவொற்றியூர் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர் கள் கே.பி.சொக்கலிங்கம், இரா.சந்தர், ஏகா.கார்த்திக் கேயன், எம்.எல்.சரவ ணன், மாவட்ட பிரதிநிதிகள் கே. கார்த்தி கேயன், எஸ்.மகேந்திரன், இ.ரமேஷ், பாண்டியன், கே.சந்தோஷ் குமார், எஸ். செல்வம், டி.மகேந்திரன், அல்லிமுத்து, ஆர்.ரமேஷ், இரா.பிரகேஷ், எம்.கார்த் திக், ப்ரெட் சுரேஷ், கணே சன், தயாளன், ராஜவேல், சங்கர், சுகுந்தா, ராதா, வாசுகி, மீனா, சுகந்தி மற் றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட பள்ளியகரம் பகுதி மகளிர்களிடம் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், கிளைச் செயலாளர் அல்லிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகத்தில் நடைபெறுகிற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து புக்கத்துறை பேரூராட்சியில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமையில் தலைமை கழக பேச்சாளர் எழும்பூர் மோ. கோபிநாத், புக்கதுறை கிளை கழக செயலாளர் மற்றும் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம். மணிகண்டன், எஸ்.தர்மேஷ், எஸ்.சமத் பாஷா, எஸ். வசந்தகுமார், சி.ரகு உள்ளிட்டோர் கலந்துகொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மாமண்டூர் ஊராட்சி பாகம் 21 யில், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் முன்னிலையில் மாவட்ட துணைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வி நிலை குழு தலைவர் பாலவாக்கம் த.விஸ்வநாதன் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கர்ணா, சீனிவாசன், குமார், பாபு, சுரேந்தர், உதயா, ஜி.விஜயகுமார், டி.தாஸ், எஸ்.சுரேஷ், எஸ். கே.பாலாஜி, ஜி.எம்.பாலாஜி, சீனிவாசன், சதீஷ்குமார், சஞ்சல், மோனிஷ், மதன், குமரன், பாண்டியராஜன், தமிழ்ச்செல்வன்,வீரன், நவீன்குமார், ராஜாமணி, ஜானகி, ஜெய பாலகுமாரன், சுரேஷ், ராஜாமணி, டி.ராஜேந்திரன், பிரகாஷ், கன்னியப்பன், சரத், சுப்புராஜ், விமல், ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்

தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

ஈ.ராஜா எம்.எல்.ஏ. சகோதரர் ஈ.பாலமுருகன் மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!

தென்காசி, அக். 4- கழக மூத்த முன்னோடி ஈஸ்வரன் புதல்வரும் தென் காசி வடக்கு மாவட்ட செய லாளர் - வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா அவர்களின் அண் ணன் தென்காசி 31வது நகர் மன்ற உறுப்பினர் ஈ.பாலமு ருகன் அவர்கள் நேற்று (03. 10.2026 சனிக்கிழமை) தென்காசி சிந்தாமணியில் உள்ள இல்லத்தில் மறை வெய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதிச்ச டங்கு இன்று (04.10.2026 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணியளவில் நடைபெறுகிறது.



ஈ.பாலமுருகன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் அன்னா ரது உடலுக்கு மலர்வளை யம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஆசிய விளையாட்டு கிரிக்கெட் போட்டி:

தங்கப் பதக்கத்தை வென்றது இந்தியா!

நிஷின், அக்.4- ஜப்பானில் ஆசிய விளை யாட்டு போட்டிகள் நடந்து வருகின்றன. ஆண்கள் கிரிக் கெட்டில் இன்று இறுதிப் போட்டி நடைபெற்றது.

நேற்று காலை 10 மணிய ளவில் தொடங்கிய இறு திப்போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் ஷ்ரேயஸ் அய்யர் பேட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் கள மிறங்கிய இந்திய அணி நிர் ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 211 ரன்கள் குவித்தது. தொடக்க வீரர் அபிஷேக் சர்மா அதிர டியாக ஆடி 28 பந்தில் 61 ரன்கள் குவித்தார்.

இதையடுத்து, 212 ரன் கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ் தான் களமிறங்கியது. 39 ரன்னுக்குள் 3 விக்கெட்டு களை இழந்தது பாகிஸ்தான்.

கடைசி வரை போரா டிய ஹாசன் நவாஸ் 96 ரன் னில் அவுட்டானார்.

இறுதியில், பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப் புக்கு 192 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் இந் திய அணி 19 ரன்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப் பற்றி அசத்தியது.

தோல்வி அடைந்த பாகிஸ்தான் வெள்ளிப் பதக்கம் வென்றது.

சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்

ஐயோ அம்மா!

(தத்துவமேதை டி.கே.சீனிவாசன்)



"யாருடா அவன் வாயில்லா ஜீவன்கள் குடிக்கிற தண்ணிய எச்சி பண்றது?" என்ற முரட்டுக் குரல் ஒன்று கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். ஓங்கி ஒரு அறை. பளார் என்ற சத்தம். அதைத் தொடர்ந்து "ஐயோ அம்மா" என்ற அவலக் குரல். விறைக்க விறைக்க தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த மாடுகளும், திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடியும் குடிக்க ஆரம்பித்தன. கன்னத்தைத் தடவிக் கொண்டிருந்த இவனுடைய கைகளை அவள் மெல்ல பற்றினாள். பரிவாக, அந்த அடிபட்ட கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள். இரண்டுத் துளி கண்ணீர் அந்தக் கையை நனைத்தன. "அழுவாதே அவனுங்களே அப்படித்தான். மொரட்டுப் பசங்க" என்று அன்போடு சொன்னாள்.

அவர்கள் இருவரும் எப்படியோ அறிமுகமானவர்கள். இவன் அழைத்து வரவேண்டியது. அவள் காசு வாங்க வேண்டியது. கூட்டு வியாபாரம். அதுகூட இரண்டு நாட்களாக மந்தம். வீடு வீடாக நின்று தங்கள் குறைகளை முறையிட்டார்கள். வீதி வீதியாக நின்று கெஞ்சிப் பார்த்தார்கள். நெஞ்சிலே இரக்கமுள்ள புண்ணியவான்களில் எவரும் கண்ணில் தட்டுப்படவே இல்லை. அலுத்து சலித்து அயர்ந்து, தண்ணீரையாவது இரண்டு வாய் குடிக்கலாம் என்று வந்தபோதுதான் அந்த அறையும், அவதியும்.

வெகுநேரம் கையை நீட்டிக்கொண்டே நின்றார்கள். எத்தனையோ பேர் காப்பி சாப்பிட்டுவிட்டு போய்க் கொண்டிருந்தார்கள். ஒருத்தருக்காவது. 'ஒரு காலணா கொடுத்தால் கடவுள் காப்பாற்றுவார்' என்கிற நம்பிக்கையே இல்லை. விதம் விதமான நிறங்களில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்த அந்த தின்பண்டங்கள் இவர்கள் இருவரையும் பார்த்து புன்னகை புரிந்தன.

யாரோ ஒரு நாகரீகமான மனிதர் எங்கே முகத்தில் வழிந்த வியர்வை, பவுடரைக் கலைத்துவிடப் போகிறதோ என்ற கவலையால் துடைக்க கைக்குட்டையை எடுத்தார். ஒரு காலணா நழுவி கீழே விழுந்தது. இவன் ஓடி அதை எடுத்தான். சுற்றிலும் திரும்பிப் பார்த்தான். உலகமே அவனை உற்று நோக்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றிற்று. அறை வாங்கிய கன்னத்தில் குடியேறியிருந்த அந்த வலி அப்போதுதான் காலி செய்து கொண்டிருந்தது. அவர் பின்னாலேயே ஓடினான். "ஐயா.." என்று இழுத்தாற்போல கூப்பிட்டான். "எட்டிப்போடா... சீ.. பிச்சைக்கார நாயே" என்று சொல்லிக்கொண்டே வேகமாக நடந்து போனார்.

இவன் கையிலே இருந்த அந்த காலணாவை என்ன செய்வது என்று இருவருக்குமே புரியவில்லை. காப்பி கடையிலே இருந்த எந்த தின்பண்டமும் அந்த செப்புக்காசை மதிப்பதாக இல்லை. பக்கத்தில் வெற்றிலைப் பாக்குக்கடையில் தொங்கிக் கொண்டிருந்த வாழைப்பழக்குலை கண்களில் பட்டது. காசை எடுத்துக்கொண்டு இவன் அந்த கடைக்கு ஓடினான்.

"ஐயா காலணாவுக்கு பழந்தாங்கோ" என்று அந்தக் காலணாவை நீட்டினா. "ஒரு வில்ஸ் தாங்கோ" என்று ஒருவர் ஒரு அணாவை நீட்டினார். "இந்தாங்கவில்ஸ். பாக்கி அரையணா" என்று கடைக்காரன் சிகரெட்டையும் சில்லறையையுந் தந்தான்.

"ஐயா வயத்த பசிக்குது. காலணா பழந் தாங்கோ" என்று உரக்கக் கூவினான். "அசோகா காலணா, வெற்றிலை காலணா" என்று யாரோ ஒருவர் அறையணாவைப் போட்டார். "அசோகா இல்லியே, வேறெதாவது தரட்டான்" என்று கடைக்காரன் தன்னை நாணயமாகக் காட்டிக்கொண்டான். "அப்போ காலணாவுக்கு வெற்றிலை பாக்கு தந்திடுங்கோ" என்றார் அவர். "ரொம்ப நாழியா கேக்குரேனே" என்று இவன் கத்தியே விட்டான்.

"ஏண்டா கத்துறே, கொண்டா காசை" என்று காசை வாங்கிப் பெட்டியில் போட்டுவிட்டு, "என்ன வேணும்?" என்று கடைக்காரன் கேட்டான். "காலணா பழந் தாங்கோ" என்று இவன் பழைய பாடத்தைப் படித்தான். "பழம் ஒண்ணு அரையணா. பாக்கி காலணா தா" என்று கடைக்காரன் கையை நீட்டினான். அவன் பரிதாபமாக அந்தப் பழங்களைப் பார்த்தான். அவைகளும், "அவளுக்கு நானென்ன மட்டமா?" என்று அந்த தின்பண்டங்களைக் காட்டின. "இல்லை" என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தான். வீசி எறியப்பட்ட அந்த காசு உருண்டோடி எதிரிலே உட்கார்ந்திருந்த முடவன் எதிரில் விழுந்தது. அவனும், "நல்லாயிருப்பீங்க சாமி.. மவராஜனா" என்று வாழ்த்தினான். விழுந்து கிடந்த காசை இவன் ஓடி எடுத்தான்.

"சீ பிச்சைக்காரக் கழுதை" என்று திட்டிக்கொண்டே அந்த முடவன் விட்டான் ஓங்கி ஒரு அறை. 'பளார்' என்ற சத்தம் கேட்டது. "ஐயோ அம்மா" என்ற அலறல் அதைத் தொடர்ந்தது. கடைக்காரன் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். வெற்றிலைப் பாக்கு போட்டவன், காறி உமிழ்ந்தான். சிகரெட் வாங்கியவன் சுருள் சுருளாக புகைவிட பழகிக் கொண்டிருந்தான். அடிவாங்கிய இவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

வெகுநேரம் இந்த விசித்திரமான உலகத்தை வேதனையோடு பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார்கள் பலர். யார் யாரோ போய்க் கொண்டிருந்தார்கள். சிலர், "ஐயோ பாவம்" என்று அனுதாபந் தெரிவித்தார்கள். சிலர், "பிச்சைக்காரர்கள் தொல்லை"யைப் பற்றி குறிப்புரை கூறினார்கள். சிலருக்கு இவர்கள் இருவரும் இருப்பதாகவே தோன்றவில்லை.

"இந்த கண்றாவியை என் கண்ணால் பார்க்க முடியாது" என்று மனம் கசிந்து சூரியனும் மறைந்து போனான்.

(முரசொலி 21.1.1948)